# DEPOSTITION OF WITNESS

# IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,

# NAGERCOIL

## O.S. No. 115 of 2015

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ° | ஜஸ்டின் சேவியர் | வா.சா.2 |
| தந்தை பெயர் | ° | ஏசுமரியான் | |
| கிராமம் | ° | பெருமாள் புரம் | |
| வட்டம் | ° | அகஸ்தீஸ்வரம் | |
| தொழில் | ° | கூலி வேலை | |
| வயது | ° | 57 | |

Solemnly affirmed in accordance with the Provision of Act X of 1873 of the day of 20.09.2021.

**சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-**

எனது வீடு வாதி வீட்டிலிருந்து எவ்வளவு தொலைவில் உள்ளது என்றால் 1/2 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. என்னுடைய வீடு உள்ள இடம் பட்டா இடம். தாவா சொத்தை எனக்கு தெரியும். அதன் புல எண் தெரியுமா என்றால் 333/2 ஆகும். அது சம்பந்தமாக வருவாய் துறை ஆவணங்கள் ஏதாவது பார்த்துள்ளேனா என்றால் இல்லை. வருவாய் துறை ஆவணங்களில் புல எண். 333/2 குளம் புறம்போக்கு என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்து அரசு புறம்போக்கு என்றால் சரி தான். தாவா சொத்து குளம் புறம்போக்கு என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. புறம்போக்கு சொத்து என்றாலே உரிமை மாற்றம் செய்ய முடியாது என்றால் சரி தான். தாவா சொத்தின் அனுபவத்தில் வாதிக்கு முன்னர் யார் ஆக்கிரமித்து இருந்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்து சம்பந்தமாக தமிழ்நாடு அரசு 'பி' மெமோ வழங்கியுள்ளது என்றால் சரி தான். வாதி பெயரிலும் 2006 ம் ஆண்டு தமிழ்நாடு அரசு 'பி' மெமோ வழங்கியுள்ளது என்றால் சரி தான். வாதி

பெயரில் தமிழ்நாடு அரசு 'பி' மெமோ வழங்கியுள்ளதால் வாதி நீண்ட கால அனுபவ பாத்தியம் கோர இயலாது என்றால் சரியல்ல. தாவா சொத்து இருக்கும் பகுதியில் விவசாயம் நடைபெறுகிறது என்றால் சரியல்ல. 700 அடி தள்ளி விவசாயம் நடைபெறுகிறது. வாதி நீர் நிலையை ஆக்கிரமித்து உள்ளதால் தாவா சொத்து அமைந்துள்ள பகுதியில் விவசாயம் செய்ய தடை உள்ளது என்றால் சரியல்ல. இது சம்பந்தமாக அரசுக்கு பொது மக்களிடம் இருந்து புகார்கள் சென்ற வண்ணம் உள்ளன என்றால் சரியல்ல. நீர் நிலைகளில் உள்ள ஆக்கிரமிப்பினை அப்புறப்படுத்த வேண்டியது என்றால் சரி தான். நீர் நிலை புறம்போக்கு சம்பந்தமாக வீட்டு மனை உள்ளிட்ட தனி நபர் பட்டாக்கள் வழங்கப்படாது என்றால் தாவா சொத்து நீர் நிலை புறம்போக்கு அல்ல. நான் எந்த ஆவணங்களையும் பார்க்காமல் நத்தம் புறம்போக்கு என வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி நீண்ட காலமாக தாவா சொத்தில் குடியிருந்து வருவதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.